# தேம்பாவணியில் பறவையினங்கள்

*முனைவர் பி.வெ. ஜெமிபிரியா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6471

***முன்னுரை***

*கூர்ந்து கவனித்தால் ஒவ்வொரு பறவையும் ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்வதை அறிய முடியும். அதை அனுபவிக்க முடியும்ஆனந்தப்பட முடியும். மரத்திற்கு மரம் பறந்துதிரியும் பறவை உழைப்பாளியின் உழைப்பை நினைவூட்டுகிறது. பறவைகளின் கூடுகள் படைப்பாளிகளின் படைப்பைப் பறைசாற்றுகின்றன. "பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்" என்ற பாடல்வரிகளுக்கு ஏற்பப் பறவைகளில் "தையல் பறவைகளும் உண்டு நெசவாளிப் பறவைகளும் உண்டு பாடும் பறவைகளும் உண்டு நடனப்பறவைகளும் உண்டு திருடும் பறவைகளையும் பார்க்கலாம் காவல் காக்கும் கரிச்சான்களையும் பார்க்கலாம். நவீன ஏவுகணைகளைப் போல கண்டம் விட்டுக் கண்டம் பாயும் சுறுசுறுப்பான பறவைகளையும், சோம்பறிப்பறவைகளையும்" காணலாம். இப்படி மனிதர்களைப் போலவே பறவைகளிலும் பல நிலைகளும் வாழ்வியல் முறைகளும் காணப்படுகின்றன. மனிதனைப் போலவே பறவைகளும் கடல் கடந்து பயணம் மேற்கொள்கின்றன. மழை, வெயில், புயல் என்ற இயற்கையின் சீற்றங்களுக்கு எதிராகப் போராடுகின்றன. பகலில் மட்டுமல்ல இரவின் இருளிலும் பளிச்சீடும் விளக்குகளுக்கு மத்தியிலும் பாதை தவறாமல் தங்களின் பயணத்தைத் தொடருகின்றன. தேம்பாவணியில் வீரமாமுனிவரால் அடையாளம் காட்டப்பட்ட பறவையினங்களையும் அவற்றின் தனிச்சிறப்புகளையும் ஆராய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.*

**அன்றில்**

தேம்பாவணியில் இரண்டு இடங்களில் *(5:133,10:14)* அன்றில் பறவை பற்றிய குறிப்பு உள்ளது. கிரவுஞ்சகம், தரிஞ்சகம், அகன்றில் என்றெல்லாம் அழைக்கப்படும் இதனை வீரமாமுனிவர் அன்றில் என்றே குறிப்பிடுகின்றார். அன்றில் பறவைகளைப் பற்றிப் பேசாத இலக்கியங்கள் இருக்க இயலாது என்னும் அளவிற்கு அன்றில் பறவைகளில் இணைபிரியாமை போற்றப்படுகிறது. பெட்டையைப் பிரிந்த ஆண் அன்றில் *(5:133)* வாடிநின்றதையும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழும் *(10:14)* வாழ்க்கை நிலைகளையும் தேம்பாவணி எடுத்துக்காட்டுகிறது.

**அன்னம்**

தேம்பாவணியின் அன்னப்பறவை பற்றி 44 இடங்களில் குறிப்புகள் உள்ளன. இதனை உண்ணம், எகினம், மராளம், வக்கிராங்கம், விகங்கம், காதம்பம் என்றும் அழைப்பர். அன்னம், அனம், ஓதிமம், அன்னப்பார்ப்பு, பெடை, சிறை, அஞ்சம், பொற்சிறை என்று வீரமாமுனிவர் தேம்பாவணியில் குறிப்பிடுகிறார். ஒளி பொருந்திய *(1:50)* பொன்மயமான சிறகுடைய *(1:29)* பாலுண்ணும் அன்னம் *(1:24)* என்றும், அழகிய சிறகுடைய *(30:46)* அரச அன்னம் வயலில் நிறைந்திருந்தையும் *(11:105)* தாமரை மலர்கள் நிறைந்த தடாகத்தில் வாழும் தன்மையையும் *(21:31)* தேம்பாவணி குறிப்பிடுகிறது.

அன்னங்கள் நீரை நீக்கிப் பாலை மட்டும் உண்ட செய்தியைக் குறிப்பிடும் வீரமாமுனிவர் *(4:59)*தாமரை மலர்மேல் தங்கிய அன்னக்குஞ்சுகளை *(1:70,11:135,12:6,14:28,21:30,26:105)* கொடிய பறவைகள் தூக்கிச் சென்றதையும் *(25:89)* குறிப்பிடுகிறார். அறிவில் வல்ல சான்றோர்கள் பிறர் தனக்குச் செய்த தீங்கினை எண்ணாது அவர்கள் செய்த சிறிய நன்மைகளையும் பெரிதாக ஏற்பர். அது போன்று பாலும் நீரும் சேர்ந்த கலவையை வைத்தாலும் அன்னமானது நீரை விடுத்துப் பாலை மட்டுமே உண்ணும் என்ற அறிவியல்' செய்தியைத் தேம்பாவணி எடுத்துக்காட்டுகிறது. அன்னம் நீரொழியப் பாலுண் குருகு ஆதலால் அஃது அறிவின் குறிப்பாகக் கருதப்படுகிறது.

**ஆந்தை**

ஆந்தைகள் நமக்குத் தீமை எதுவும் செய்வதில்லை. எலிகளையும், அணில்களையும் கொன்று அவை விவசாயிகளுக்கு நன்மை செய்கின்றன. பல நாடுகளில் ஆந்தையை விவேகத்தின் உருவமாகக் கருதுகிறார்கள். முன்பு புராதன ஏதென்சு நகர அரசாங்கத்தின் சின்னமாக விளங்கிய ஆந்தையை இன்று நாம் துயரத்தின் அறிகுறியாகக் கருதி வெறுக்கிறோம். அதற்கு அதன் அசாதாரண உருவமும் குரலும் கூட ஒரு காரணமாக இருக்கலாம். சேக்குவீயரின் "மாக்பெத்" நாடகத்தில், வரப்போகும் மரணத்தை ஆந்தை முன்கூட்டியே சொல்லுவதாகவும் கடைசி வந்தனம் கூறுவதாக வருகின்ற காட்சி கூட ஒருவிதத்தில் சிந்தனைத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும். ஆந்தை அலறும் தன்மையைத் தேம்பாவணி *(12:20)* ஒரே ஒரு இடத்தில் குறிப்பிடுகிறது. தேம்பாவணியில் கூகையைப் பற்றிய குறிப்புகள் 2 இடங்களில் உள்ளன. குறிப்பாக, கூகை பகலை விரும்புவதில்லை என்ற அறிவியல் உண்மையை *(27:14)(14:116)* தேம்பாவணி எடுத்துக்காட்டுவது சிந்தனைக்குரியது.

**காகம்**

தேம்பாவணியில் ஒன்பது இடங்களில் காகம் பற்றிய குறிப்பு உள்ளது. கருமை நிறம் பெற்ற காகம் *(6:63)* யாரிடமும் பறித்து உண்ணும் இயல்புடையது *(9:45,19:28)* என்ற செய்தியைத் தேம்பாவணி விளக்குகிறது. பெரும்பாலான பறவை இனங்களில் தாய்ப் பறவை தான் அடைகாப்பது வழக்கம். ஆனால் காக்கை இனத்தில் தாயும் தந்தையும் மாற்றி மாற்றி அடைகாக்கின்றன. காகம் ஒருமுறைக்கு நான்கு அல்லது ஐந்து முட்டைகள் இடுகிறது. காகங்கள் கூட்டமாக வாழ்வதுடன் சில கட்டுப்பாடுகளையும் பின்பற்றுகிறது. ஒரு காகம் காயமடைந்தால் அதைச் சுற்றி ஏராளமான காகங்கள் கூடிவிடும். காகங்களின் வாழ்வில் நீதி முறைகளும், திருமணமுறைகளும், கட்டுக் கோப்பான வாழ்வியல் நெறிகளும் காணப்படுவதாகக் கூறுவர். அகாபு மன்னன் காலத்துப் பஞ்சத்தில் கடவுள் எலியாக இறைவாக்கினருக்கு நாள்தோறும் காலையில் காக்கைகள் மூலம் அப்பமும் ஊனும் தந்து பேணிய செய்தியைத் தேம்பாவணி எடுத்துக் காட்டுகிறது.

(9:45) அதிகாலையில் கா-கா என்று கத்தித் துயில் எழுப்புவது, அழுக்குப் பொருள்களையும் அழுகிய பண்டங்களையும் உண்டு நகரத்தைச் சுத்தப்படுத்துவது என்று சம்பளம் வாங்காத அரசு ஊழியராகக் காகங்கள் பணியாற்றுகின்றன. அவசரத்திற்கு வரும் ஆகாயத் தோட்டியாய் மனிதருடன் பின்னிப் பிணைந்த வாழ்வுமுறையைக் கொண்டுள்ள காகங்களைப் பற்றித் தேம்பாவணி எடுத்தியம்புவது குறிப்பிடத்தக்கது.

## கிளி

அழகுக்கு அடையாளமாய்ச் சொல்லப்படும் பறவை கிளி, நெடுங்காலமாக இலக்கியங்களில் சிறப்பாகப் பேசப்படும் பறவையான கிளி (Pssittacidae) பற்றி தேம்பாவணியில் 18 இடங்களில் குறிப்புகள் உள்ளன. இதனை அரி, அவந்திகை, ஏசி, கீரம், சாரு, சுகம், சுவாகம், தத்தை, வன்னி என்றும் அழைப்பர். தேம்பாவணியில் வீரமாமுனிவர் கிளி என்று 15 இடங்களிலும் கிள்ளை என்று 3 இடங்களிலும் குறிப்பிடுகிறார். தேம்பாவணியில் கிளிகள் சுமந்து செல்ல இயலாத தினைக்கதிர்கள் (30:48) பற்றிய குறிப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. தேன்மொழி பேசும் கிளி (17:4) இனிய சொல் பேசும் கிளி (13:1) என்றெல்லாம் கிளியைப் பற்றிய அறிவியல் கருத்துக்கள் தேம்பாவணியில் இடம் பெற்றுள்ளது.

## குயில்

தேம்பாவணியில் 41 இடங்களில் குயில் பற்றிய குறிப்பு உள்ளது. இதனை அன்னிய புட்டம், கள கண்டம், காள கண்டம், கோகிலம், கோரகை, பரபிருதம், பரபுட்டம், பிகம் என்றும் அழைப்பர். வீரமாமுனிவர் தேம்பாவணியில் 34 இடங்களில் குயில் என்றும் 7 இடங்களில் மாங்குயில் என்றும் குறிப்பிடுகிறார். வசந்த காலம் முழுவதும் இரவு பகலாகப் பாடும் குயில் வாடைக் காலம் வந்ததும் வாயடைத்துப் போகிறது என்ற அறிவியல் செய்தியைத் தேம்பாவணி எடுத்துக்காட்டுகிறது (15:159) குயில்கள் தன் துணைகளைத் தேடி (1:42) மரக்கிளைகளில் அமர்ந்து (30:22) 30:46, 30:90) இன்னிசை (26:17) எழுப்பியதையும் தேம்பாவணி காட்டுகிறது. ஆண் குயில் வினாடிக்கு ஒரு கூவுதல் வீதம் 170 முறை தொடர்ந்து கத்துவதாக அறிஞர்கள் கண்டுள்ளனர். குயில்களின் பொதுவான உணவு கம்பளிப்புச்சி, புழு புச்சி, சிலவண்டு, வெட்டுக்கிளி, தத்துப்புச்சி, சிலந்தி என்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. தேம்பாவணியில் வீரமாமுனிவர் குயிலைப் பற்றிச் சொல்கையில் தேன் உண்ட குயில்கள் (6:44) என்று குறிப்பிடுகிறார். இச்செய்தி அறிவியல் நோக்கில் ஆராயத்தக் கதாகும்.

## கொக்கு

தேம்பாவணியில் ஐந்து இடங்களில், கொக்குகள் பற்றிய குறிப்பு வருகிறது. குரண்டம், பலாகம், புதா, மஞ்சுகம் என்றெல்லாம் அழைக்கப்படும் இதனை வீரமாமுனிவர் தேம்பாவணியில் கொக்கு என்று 4 இடத்திலும்,பகம் என்று ஓர் இடத்திலும் குறிப்பிடுகிறார். "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி நிற்குமாம் கொக்கு" என்று பழந்தமிழ்ப்பாடல் உண்டு. குளத்திலே நின்று கொண்டிருக்கும் கொக்கு அப்படியே அசையாமல் வாடி இருப்பது போலத் தோன்றும் ஆனால் கொக்கு மிகவும் கவனமாகவே இருக்கும். சிறிய மீன்களைப் போகவிட்டுத் தனக்குத் தேவையான பெரிய மீன் வரும் வரை காத் திருந்து கொத்திச் சென்றுவிடும். இதையே

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"**

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். எதையும் உரிய காலத்தில் செய்யவேண்டும். காலத்தைத் தவறவிட்டால் வெற்றியில்லை என்பது வள்ளுவர் வாக்கு. கொக்கை ஒரு

குறியீடாக வைத்து சிவா சிவனின் மனமாற்றம் உரிய காலத்தில் நிகழ்ந்தது என்னும் குறிப்பைத் தேம்பாவணி எடுத்துக் காட்டுகிறது.

### கௌதாரி

தேம்பாவணியில் 2 இடங்களில் கௌதாரி பற்றிய குறிப்பு உள்ளது. வீரமாமுனிவர் சிரவம், சிவல் என்று இதனைக் குறிப்பிடுகிறார். வேட்டைக்காரர்கள் மிக விரும்பி வேட்டையாடும் பறவைகளுள் கௌதாரியும் ஒன்று. சிறுகாடுகளிலும், புதர்களிலும், புல்வெளி களிலும் மறைந்து தரையோடு தரையாக ஒட்டி வாழும் இவற்றை விளைநிலங்களில் அறுவடையின் போது காணலாம். தானியங்கள், முளைச் செடிகள், எறும்புகள், பலவகைப் புச்சிகள் ஆகியவற்றை இவை உண்கின்றன. கவுதாரிகள் ஆண்டு முழுவதும் முட்டையிடுகின்றன. முட்டைகள் இலேசான தவிட்ட நிறம் உடையவை. கோழிக் குஞ்சுகளைப் போலவே கௌதாரிக் குஞ்சுகளும் முட்டையிலிருந்து வெளி வந்தவுடனே ஓடிச்சாட ஆரம்பித்து விடும். மனிதர்களால் வேட்டையாடப்பட்டு அழிவை எதிர்நோக்கி வாழும் கௌதாரிகளை வீரமாமுனிவர் தேம்பாவணியில் (14:116, 30:23) அடையாளம் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. குஞ்சுகளைக் கவர வரும் பகைவரை ஏமாற்ற கௌதாரி காயமுற்றவை போலவோ, நொண்டியானவை போலவோ நடிக்கும். உடனே பகைப்பறவைகள் குஞ்சு களை விட்டு விட்டு இவற்றைப் பிடிக்க ஓடி வரும். சிறிது தூரம் இவ்வாறு அவற்றைத் திசைமாற்றி இழுத்துக்கொண்டு சென்று இவை பறந்தோடிவிடும். தந்திரத்தையும், புத்திக்கூர்மையையும் மனிதன் கௌதாரியிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவையாகும்.

### பருந்து

தேம்பாவணியில் 5 இடங்களில் பருந்து பற்றிய குறிப்பு உள்ளது. உவணம், கங்கம், சேனம், பாரசிகை என்றெல்லாம் அழைக்கப்படும் இதனை பருந்து (12:25,12:26) பாறு (14:102,15:61). வானத்தில் உலவும் பருந்து இமைப்பொழுதில் தரையிறங்கித் தன் கால்களில் இரையைக் கவ்விச் செல்லும் அளவிற்குப் பருந்தின் கண்கள் கூர்மை மிகுந்தவை. வானத்தில் உலவும் பருந்து தன் நகத்தால் உணவைக் கவர்வதற்கு முன்பே தன் கண்களால் இரையைக் கவர்ந்து கொண்டதன்மையையும்(12:25),பருந்தின் வேகத்தையும் (14:102) வீரமாமுனிவர் தேம்பாவணியில் குறிப்பிட்டுள்ளார்.

### புறா

பறவைகளில் மென்மை மிகுந்த புறா (Columbia livia) வைப் பற்றித் தேம்பாவணியில் 11 இடங்களில் குறிப்பு உள்ளது. இரதபதம், களரவம், தூதுணம், காளப தம் (மாடப்புறா), கபோதம், பாராவதம், என்றெல்லாம் அழைக்கப்படும் இதனை வீரமாமுனிவர் புறா, புள், புறவம், கபோதம், புறவு என்று குறிப்பிடுகிறார். விலியத்தில் மணிப்புறா பலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. புறாவின் வடிவில் தெய்வீக சக்தி இயேசு பெருமானை வந்தடைந்தாகச்சொல்லப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் (Old Testament) உலகம் முழுவதும் ஊழி வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட போது இறைவிசுவாசியான நோவாவும் அவரது குடும்பத்தினரும் ஒரு படகில் ஏறி உயிர்தப்பினர். ஊழி வெள்ளத்திலிருந்து உயர்த்தப்பட்ட நோவா வெள்ளம் வடிந்து விட்டதா என்பதை அறிய கப்பலிலிருந்து ஒரு மணிப்புறாவை அனுப்பினார். இருமுறை சென்று கரை காணாது திரும்பிய அது மூன்றாம் முறை ஆலிங் மரத்தின் சிறு கிளையுடன் திரும்பி வந்த செய்தியை விவிலியம் குறிப்பிடுகிறது.

**மயில்**

தேம்பாவணியில் 53 இடங்களில் மயில் பற்றிய குறிப்பு உள்ளது. வீரமாமுனிவர் மயில் என்று 30 இடங்களிலும்,மஞ்ஞை என்று 10 இடங்களிலும், தோகை என்று 5 இடங்களிலும் சிகி என்று 4 இடங்களிலும் நவிரம், பிணிமுகம், பீலி, ஒகரம் என்றும் இதனைக் குறிப்பிடுகிறார். மயில் இடம்பெறாத சங்கஇலக்கியம் எதுவுமே இல்லை என்று குறிப்பிடுகின்ற அளவிற்கு 2381 சங்கப் பாக்களில் 142 பாக்கள் மயிலைப் பற்றியவை. மழையில் நனைந்த மயில் மகிழ்வுடன் ஆட அது குளிரில் நடுங்குவதாகக் கருதி அதற்குத் தன் போர்வையினை ஈந்து மகிழ்ந்தானாம் பேகன், மானிட உயிர்க்கன்றிப் பிற உயிர்க்கும் இரங்கி நின்றமையால் கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிச் சிறப்புப் பெற்றான் பேகன். பேகன் சிறப்புப் பெறக் காரணமாக அமைந்த மயில் இன்று தேசியப் பறவை என்ற சிறப்பைப் பெறுகின்றது.

**முடிவுரை**

விசித்திரமான பறவைகளின் வாழ்வில் பல விந்தையான செய்திகள் உள்ளன. கற்றுக்கொள்ள நினைக்கும் எவருக்கும் பறவைகளின் வாழ்வு பாடமாக அமைவது நிச்சயம். தன்னை விட வலிமையான கோட்டானைக் காக்கை பகல் நேரத்தில் வென்றுவிடும். ஆனால் இரவில் அது சாத்தியமில்லை. மாவீரன் நெப்போலியன் உருசியா மீது குளிர்காலத்தில் படை எடுத்ததால் தோற்றுப்போனதை வரலாறு காட்டும். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி நிற்கும் கொக்கு போல மனிதன் நேரத்தையும் வாய்ப்புகளையும் காலமறிந்து பயன்படுத்த வேண்டும் என்பதை இப்பறவைகளின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது.

**துணை நூல்பட்டியல்**


1. வளன் அரசு. பா. தேம்பாவணித் திறன் (மறுபதிப்பு), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் (2012)
2. வீரமாமுனிவர் தேம்பாவணி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை (2014)